4th August 1966]

திரு. வை. சங்கரன் : இதனுல் எவ்வளவு ஏக்கரா சாகுபடிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? அவற்றில் என்ன என்ன பயிரிடலாம் என்று யோசிக்கப்படுகிறது?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போதுதான் அங்கே போய்ப் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகுதான் எதுவும் சொல்ல முடியும்.

Destruction of flying in Thinnaiyampatti

*** 76 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—**

(*a*) whether it is a fact that control measures taken for elimination of flying foxes (a kind of bat) in Thinnaiyampatti village near Keeranur in Tiruchirappalli district had to be suspended due to the sentimental objection of the villagers thereat: and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை தாலுகா, குண்ணுண்டார் கோயில் வட்டாரம், திண்ணைத் திரயம்பட்டி கிராமத்தில் ஐயனுர் கோவிலிலுள்ள சில ஆலமரங்களில் வாழும் வௌவால்கள் அனைத்தையும் ஒழிப்பதற்காக புது டில்லி, பயிர்ப் பாதுகாப்பு நெறியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வௌவால் ஒழிப்புக்கான தொழில் நுட்ப அதிகாரி ஏற்பாடுகள் செய்தார். ஆனுல் அக் கிராமவாசிகள் அவற்றின் ஒழிப்பை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்தார்கள். வௌவால்களை அறவே ஒழிப்பது அவர்களின் அற உணர்வுக்கு எதிராக உள்ளதாகக் கூறினுர்கள். வௌவால்கள் கொல்லப்பட்டால் கிராமத்திலுள்ள சில குழந்தைகள், ஆடு, மாடுகள் முதலியன இறக்க நேரிடும், என்று தாங்கள் நம்புவதாக அவர்கள் தெரிவித்தனர். அவைகள் கொல்லப் படுவதற்கு முன் தங்கள் உயிரைத் தியாகம் செய்யத் தயாராக யிருப்பதாகவும் அவர்கள் கூறினர். இவ்வாறு அவர்கள் இதைத் கடுமையாக எதிர்த்ததால் கருதியிருந்த இந்த வௌவால் ஒழிப்பு வேலை நிறுத்தப்பட்டது.

திரு. சா. கணேசன் : இந்த வௌவால்களை ஒழிக்க வேண்டு மென்ற முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன? அவற்றினுல் பயிர் முதலானவற்றுக்குச் சேதம் வந்ததா? அல்லது மக்களுக்கும், விவசாயிகளுக்கும், தீமைகள் உண்டாயிற்ற? பொதுமக்களுக்கு சுகாதார முறையில் தீமைகள் உண்டாயிற்ற? எந்த எந்தக் காரணங்களை அடிப்படை யாகக் கொண்டு அவற்றை அழிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. பயிர்களை அழிப்பதாக யாராவது பெட்டிஷன் போட்டிருப் பார்கள். அதன்பேரில் நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : இந்த வௌவால்களின் பெரும் பகுதி ஆலயங்களில் புகுந்து கொண்டிருக்கின்றன. அதனால் ஆலயங்களில் துர்நாற்றம் அடிக்கிறது. அவற்றை அங்கிருந்து அழிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கோயில்களில் இருக்கிற சிப்பந்திகள் இப்போதே அவற்றை விரட்டி வருகின்றனர். ஆலயங்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் கருத்தும்.

கனம் சபாநாயகர் : ஜீவகாருண்யம் குறுக்கே நிற்குமோ என்று சந்தேகம்.

வீடூர் நீர்த்தேக்கம்.

* 77 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீடூர் நீர்த்தேக்கத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் ?

(இ) அத் தொழிலாளர்களில் சிலருக்குப் பஞ்சப்படி கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(உ) ஆமெனில், அதன் காரணம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 15.

(இ) ஆம். அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்களில் ' (work charged establishment) மேஸ்திரியைத் தவிர மற்றத் தொழிலாளர்கள் யாருக்கும் அகவிலைப் படி பெறுவதற்கு உரிமையில்லை.

(உ) அரசாங்கத்தைச் சேராத, வேலை நிதி ஊதியம் பெறும் தொழிலாளர்கள், சம்பள விகிதங்களிலோ படிப்படியாகவோ சம்பளம் பெறுவதில்லை. அகவிலைப்படி முதலிய அனைத்தும் அடங்கிய குறிப்பிட்ட சம்பள வீதங்களே அவர்களுக்கு வழங்கப் படுகின்றன.

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, வீடூர் நீர்த் தேக்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் 60 ரூபாய் தான் சம்பளம் பெறுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தில் தொடர்ந்து ஐந்தாறு ஆண்டுகளாகப் பணி புரிந்து வருகிறார்கள். இவ்வளவு குறைந்த ஊதியத்தை வைத்துக் கொண்டு அவர்களால் எப்படிக் காலம் தள்ள முடியும் ?

கனம் சபாநாயகர் : உபகேள்விகள் கேட்பதற்குப் பதிலாக ஒவ்வொருவரும் இப்படி நீண்ட பிரசங்கமாகச் செய்துகொண்டு போனால் எப்படிக் கேள்விகளை முடிக்க முடியும் ? கேள்வியாகப் போடுங்கள். பேசிக்கொண்டே போகக் கூடாது.